**<u>கூடுதல் மாவட்ட நீதிமன்றம்</u>**
**<u>விருதுநகர் மாவட்டம் (இருப்பு) திருவில்லிபுத்தூர்</u>**

**MCOP.No: 225/2022** நாள் 02.09.2025

ம.சா.1, திரு.காளிமுத்து

**மா.சா.1 மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை–**

விபத்து சமயத்தில் TN 84 L 6401 பஜாஜ் பல்சர் இருசக்கர வாகனத்தில் என் மகன் பின்னாடி அமர்ந்து பயணம் செய்துள்ளார். என் மகன் அப்பொழுது தலைக்கவசம் அணிந்தாரா என்று எனக்கு தெரியவில்லை. என் மகன் விபத்து சமயத்தில் தலைக்கவசம் அணிந்திருந்தார் என்று நான் இந்த மனுவிலும் மற்றும் சாட்சிய பிரமாண பத்திரக்கையிலும் புகாரிலும் சொல்லவில்லை என்றால் சரிதான். என் மகன் விபத்து சமயத்தில் தலைக்கவசம் அணிந்திருந்தால் என் மகனுக்கு தலையில் காயம்பட்டு இறந்திருக்கமாட்டார் என்றால் அப்படியில்லை. தலைக்கவசம் அணியாமல் வாகனத்தில் பயணம் செய்வது என்பது மோட்டார் வாகன விதிமுறைகளை மீறிய செயல் என்றால் சரிதான். அதனால 2ம் எதிரமனுதார் எங்களுக்கு எந்தவிதமான இழப்பீடு தொகை செலுத்தவேண்டியதில்லை என்றால் சரியல்ல. மேற்படி இருசக்கர வாகனத்தை ஓட்டி சென்ற வைரமுத்து என்பவருக்கு விபத்து சமயத்தில் ஓட்டுநர் உரிமம் இல்லை என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. மேற்படி TN 84 L 6401 பஜாஜ் பல்சர் இருசக்கர வாகனத்தை மோட்டார் வாகன ஆய்வு சமயத்தில் மேற்படி வைரமுத்து என்பவர் தன்னுடைய ஓட்டுநர் உரிமத்தை சமர்ப்பிக்கவில்லை என்று அந்த அறிக்கையில் சொல்லப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வைரமுத்து என்பவருக்கு விபத்து சமயத்தில் ஓட்டுநர் உரிமம் உள்ளது என்பதை காண்பிக்ககூடிய ஆவணத்தை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விபத்து சமயத்தில் அவருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. விபத்து சமயத்தில் செல்லத்தகுந்த ஓட்டுநர் உரிமம் இல்லாமல் வாகனத்தை ஓட்டி சென்றது மோட்டார் வாகன விதிமுறைகளை மீறிய செயல் என்றும் காப்பீடு விதிமுறைகளை மீறிய செயல் என்றும் அதனால் 2ம் எதிர்மனுதாரர் எங்களுக்கு விபத்து இழப்பீடு தொகை செலுத்தவேண்டியதில்லை என்றால் அது சரியல்ல. எங்களுக்கு ஏதேனும் விபத்து இழப்பீடு தொகை கிடைக்கப்பெற வேண்டும் என்றால் வாகனத்தின் உரிமையாளர் 1ம் எதிர்மனுதாரர்

தான் செலுத்த வேண்டும் என்றால் அது சரியல்ல. மோட்டார் வாகன திருத்த சட்டம் 2022ன் படி ஓட்டுநர் உரிமம் இல்லாமல் வாகனத்தை ஓட்டிச்சென்றால் அதற்கு காப்பீடு நிறுவனமான 2ம் எதிர்மனுதாரர் பொறுப்பாளி அல்ல என்றும் வாகனத்தின் உரிமையாளர் தான் பொறுப்பாளி என்றும் எனவே 2ம் எதிர்மனுதாரர் எங்களுக்கு விபத்து இழப்பீடு தொகை செலுத்தவேண்டியதில்லை என்றால் அது சரியல்ல. இந்த வழக்கை பொறுத்தமட்டில் மேற்படி வாகன விபத்தை பொறுத்தமட்டில் குற்றவியல் நீதிமன்றத்தில் தாக்கலான பார்வை மகஜர், வரைபடம், மோட்டார் வாகன ஆய்வு அறிக்கை மற்றும் குற்ற இறுதி அறிக்கையை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி ஆவணங்கள் அனைத்தும் முக்கியமானவை என்றும் அவைகளை நான் தாக்கல் செய்யாததால் நாங்கள் தாக்கல் செய்த மனுவானதை தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் அது சரியல்ல. விபத்து சமயத்தில் என் மகனுக்கு திருமணம் ஆகவில்லை. விபத்து சமயத்தில் என் மகன் வயது 19. என் மகன் விபத்து சமயத்தில் எந்தவித வேலைக்கும் செல்லாமல் அவருக்கு வருமானம் எதுவும் இல்லாமல் என்னுடைய பராமரிப்பில் தான் இருந்துவந்தார் என்றால் அது சரியல்ல. விபத்து சமயத்தில் என் மகன் விவசாய கூலி வேலையை செய்துவந்ததாக நஷ்ட ஈடு பெறவேண்டி நாங்கள் உண்மைக்கு மாறாக சொல்லியுள்ளோம் என்றால் அது சரியல்ல. என் மகனுக்கு விபத்து சமயத்தில் மாதம் ஒன்றுக்கு ரூ.15,000/- வருமானம் என்பதை காண்பிக்ககூடிய ஆவணத்தை நான் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் அது சரிதான். நான் சொல்வது போல் என் மகனுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.15,000/- வருமானமாக இல்லை என்றும் என் மகனின் வருமானத்தை நம்பி நாங்கள் வாழ்ந்து வரவில்லை என்றால் சரியல்ல. விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை. அதனால் விபத்து எப்படி நடந்தது என்று எனக்கு நேரில் தெரியாது என்றால் சரிதான். விபத்து சமயத்தில் நாய் ஒன்றே குறுக்கே வந்ததால் தான் விபத்து ஏற்பட்டது என்று நாங்கள் மனுவில் சொல்லியுள்ளது பொய் என்று சொன்னால் அது சரியல்ல. எனவே நாங்கள் கேட்டுள்ள விபத்து இழப்பீடு தொகை மிகவும் அதிகமானது என்றும் எனவே இந்த மனுவை தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் அது சரியல்ல. 2ம் எதிர்மனுதாரர் இருசக்கர வாகனத்தில் பின்னாடி அமர்ந்து பயணம் செய்வோருக்கு என்று சொல்லி

எவ்விதமான பிரீமியம் தொகை பெறவில்லை என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. இந்த வாகன விபத்தை பொறுத்தமட்டில் மேற்படி வாகனத்திற்கு என் மகன் 3ம் தரப்பினர் இல்லை என்பதால் 2ம்எதிர்மனுதாரர் எங்களுக்கு விபத்து இழப்பீடு தொகை செலுத்தவேண்டியதில்லை என்று சொன்னால் அது சரியல்ல.

**சாட்சியின் கையொப்பம்**

**Name of the Interpreter : Not necessary**
Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1989 (Central Act 44 of 1989 on the 02nd day of September 2025

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு. தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் செய்யப்பட்டது.

கூடுதல் மாவட்ட நீதிபதி,
கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,
ஸ்ரீவில்லிபுத்தூர்.